**கவனிக்க.-** *23.02.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2009 - 2017 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2017.03.03

*2009 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *374* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *389* |


**கவனிக்க.-** (i) *ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அற்ற) பிரிவு - 02 சேவை மட்டத்திற்கு உரித்தான விநியோக உதவியாளர் (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் விநியோக உதவியாளர் (திணைக்களத்துக்குரிய) பதவிக்காக இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடத்தில் இருந்து இரு வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தெரிவுசெய்யப்படும் முறை.-** விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் காட்டப்படும் தகைமைச் சான்றிதழ்களின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

1.1 எழுத்துமூலப் பரீட்சை :

| பதவி | பாடங்கள் | மொத்தப் புள்ளிகள் | சித்தி மட்டம் |
|---|---|---|---|
| விநியோக உதவியாளர் | நுண்ணறிவு | 100 | 40 |
| | பொது அறிவு | 100 | 40 |

2. **தேவையான தகைமைகள் :**

2.1 திறந்த முறையில் தெரிவு

2.2 தேர்ந்தெடுக்கும் தரம் : III ஆம் தரம்

2.3 கல்வித் தகைமை.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரு திறமைச் சித்திகளுடன் (C) ஒரே தடவையில் 6 பாடங்களில் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ; மற்றும்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (01) (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

2.4 உடற்தகைமை.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வேலை செய்வதற்கும், பதவியின் பணியினைப் புரிவதற்கும் உகந்த உடல், உள நிலையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.5 வேறு.- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

சிறந்த குணநலம் பொருந்தியவராக இருத்தல் வேண்டும்.

குறித்த பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக விண்ணப்பிக்கும்போது தேவையான தகைமைகளைக் குறித்த திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **வயது :**

3.1 ஆகக்குறைந்த வயது.- 18 வயது.
3.2 அதிகூடிய வயது.- 30 வயது.

4. **பதவியின் தன்மை.-** இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. குறித்த நபர்கள் ஓய்வூதியத் திட்டங்களுக்கு தமது பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

5. **சம்பளம் :**

சம்பள இலக்கம்.- MN1 - 2016A.
சம்பளத் திட்டம்.- ரூ. 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540.

*6. நியமனம் ஒரு வருட பதில் கடமைக் (Acting period) காலத்துக்கு உட்பட்டது. அரசாங்க தகவல் திணைக்களத்தின் விநியோக உதவியாளர் பதவியின் III ஆம் தரத்துக்கு இணைத்துக்கொண்டு 3 வருடங்களுக்குள் இணைத்துக்கொள்வதற்கான முதல் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.*

*7. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன் அடிப்படையில் மற்றும் அத்துடன் தொடர்பான சுற்றறிக்கைகளின் அடிப்படையில் பதவிக்கு உரித்தான மட்டத்தில் மொழித் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*8. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் மற்றைய சட்டதிட்டங்களுக்கும் இந்நியமனம் உட்பட்டது.*

*9.* **விண்ணப்பிக்கும் முறை** :

*(1) விண்ணப்பங்கள் 2017.04.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" எனும் விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*(2) விண்ணப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவிப்பின் இறுதியில் காணப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்ப வேண்டும்.*

*(3) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைத் தபால் உறையில் இட்டு, குறித்த தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாங்க தகவல் திணைக்களத்தின் விநியோக உதவியாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்கு இணைத்துக்கொள்ளல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.*

*(4) மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று அமையாத விண்ணப்பப்படிவங்கள், முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் விடுக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்து கிடைத்தல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*10.* **பிழையான தகவல்களை வழங்குதல்.**- *உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறாகவே, குறித்த தகவல்களில் ஏதேனும் ஒன்று பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக்கொண்டதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் குறித்த விதிமுறைகளுக்கு அமைய சேவையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

*11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதேபோன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களில் சிலவற்றை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.*

*12. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்றில் ஏதேனுமொரு பிரச்சினை எழும் பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட*

*அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,*
*அரசாங்க தகவல் திணைக்களம்.*

*அரசாங்க தகவல் திணைக்களம்,*
*இல. 163, கிருலப்பனை மாவத்தை,*
*கொழும்பு 5,*
*2017, பெப்புருவரி 06.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அற்ற) பிரிவு - 02 சேவை மட்டத்திற்கு உரித்தான விநியோக உதவியாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. மொழி :

சிங்களம் - 01
தமிழ் - 02
ஆங்கிலம் - 03
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

Ex : Mr./Mrs./Miss. SILVA, A.B.

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட முகவரி (ஆங்கிலம்) :----.

2.5 தனிப்பட்ட முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.

2.6 பால் :

ஆண் - 0
பெண் - 1
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.7 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.8 இனம் :

(சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2,
இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, வேறு-5)
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.9 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.10 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

2.11 விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

2.12 தொலைபேசி இல. (இருப்பின்) :----.

3. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ஆ) க. பொ. த. உயர் தரப் தரப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

4. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
மேற்கூறப்பட்ட தகவல்களை வழங்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன். ........................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவர் தமது கையொப்பத்தை இட்டார் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிசெய்த அதிகாரியின் கையொப்பம்.

பெயர் :----.
வகிக்கும் பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நீதிபதி, நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற அதிகாரி அல்லது ரூபா 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த வருமானம் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர் ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்படலாம்.)

## சமூக சேவைகள் அமைச்சு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
(சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு)

1. **பதவி.- பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி, கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீடு - (பதவி 1) :**

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு.-

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 25 வயதுக்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணி யாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.) ;

(ii) ***ஆட்சேர்ப்புக்கான தகைமை :***

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் இளமாணிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் ஆய்வுடனான பட்டப்பின் படிப்பினைப் பெற்றிருத்தல்.

***அனுபவம் :***

(ஆ) அரச சேவையில், அரச நிறுவனமொன்றில் அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் 15 வருட சமூகப்பணி ஆய்வு முகாமைத்துவப் பிரிவில் அனுபவம் இருத்தல் ;

உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு.-

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூகப்பணி ஆய்வு முகாமைத்துவ சேவை வகுதியிலான 1 ஆம் தர பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் ;

***நேர்முகப் பரீட்சைக்காக புள்ளி வழங்கும் முறை :***

| | |
|---|---|
| உரிய நிர்வாக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தொழில்சார் அனுபவம் | - 30 புள்ளிகள் |
| வேறு திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் செயலாற்றுகை | - 25 புள்ளிகள் |
| மொத்தம் | - 100 புள்ளிகள் |

(iii) ***சம்பள அளவுத்திட்டம்.***- HM 1-3-2016 - ரூபா 86,865 - 15 x 2,270 - ரூபா 1,20,915 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப் பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

HM 1-3-2006 - ரூபா 41,745 - 15 x 1,100 - 58,245 ரூபா (மாதாந்தம்).

அடிப்படைச் சம்பளம் - 2017 - ரூபா 59,739.

2. **பதவி.- பயிற்சி உத்தியோகத்தர் II (2 பதவிகள்) :**

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை.***-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவன மொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர்தர) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவன மொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாம் பட்டத்துடன் முதுமாணிப் பட்டம் ;

அத்துடன்

(இ) சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரி தொடர்பாக அரசாங்க உயர் கல்வி/ பயிற்சி நிறுவனமொன்றில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமிடல், அமுல்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) ***நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை :***

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில்சார் அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) ***சம்பள அளவுத்திட்டம்.***- AR-*1-2016* - ரூபா *51,285* - *5* x *1,135* - *5* x *1,335* - *15* x *1,590* - ரூபா *87,485* (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (*2016.04.25* ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் *02/ 2016* I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

AR - *1-2006*A - ரூபா *24,725* - *5* x *550* - *5* x *645* - *15* x *770* - ரூபா *42,250* (மாதாந்தம்).

அடிப்படைச் சம்பளம் - *2017* - ரூபா *35,349*.

*3*. **பதவி.- ஆய்வு உத்தியோகத்தர்** II ***(1 பதவி)*** :

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று *22* வயதிற்குக் குறையாமலும் *45* வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை.***-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவன மொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்ந்த தரம்) சித்தி யுடன் ஆய்வுக் கட்டுரையுடனான பட்டம் ;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவன மொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானங்களில் முதலாம் பட்டத்துடன் முதுமாணிப் பட்டம் ;

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் அரசாங்க அல்லது நியதிச் சட்ட சபைகளில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஆய்வு உதவி யாளராக ஆய்வு நடவடிக்கைகளில் *3* வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) ***நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை :***

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | *30* புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | *30* புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | *15* புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | *25* புள்ளிகள் |
| மொத்தம் | *100* புள்ளிகள் |

(iv) ***சம்பள அளவுத்திட்டம்.***- AR-*1-2016* - ரூபா *51,285* - *5* x *1,135* - *5* x *1,335* - *15* x *1,590* - ரூபா *87,485* (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (*2016.04.25* ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் *02/ 2016* I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

AR - *1-2006*A - ரூபா *24,725* - *5* x *550* - *5* x *645* - *15* x *770* - ரூபா *42,250* (மாதாந்தம்)

அடிப்படைச் சம்பளம் - *2017* - ரூபா *35,349*.

*4*. **பதவி.- ஆய்வு உதவியாளர்** III ***(பதவி 1)*** :

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று *22* வயதிற்குக் குறையாமலும் *45* வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை.***-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆய்வு பாடங்களை உள்ள டக்கிய சமூக விஞ்ஞானங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் ;

அத்துடன்

(ஆ) அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆய்வுப் பணிகள் தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

*உள்வாரி விண்ணப்பதாரர்கள் :*

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆய்வுப் பாடங்களை உள்ளடக்கிய சமூக விஞ்ஞானங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் ;

(ஆ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) ***சம்பள அளவுத்திட்டம்.***- MA3-1-2016 - ரூபா 32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 - ரூபா 54,960 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

MA -3-2006A - ரூபா 15,600 - 10 x 215 - 4 x 240 - 15 x 320 - 7 x 360 - 26,030 (மாதாந்தம்)

அடிப்படைச் சம்பளம் - 2017 - 22,240 ரூபா.

5. **பதவி.- மொழிபெயர்ப்பாளர் III *(சிங்களம்/ ஆங்கிலம்) (1 பதவி)* :**

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை.***-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சிங்கள/ஆங்கில மொழிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி/ இலக்கியத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் ; அத்துடன் சிங்கள/ ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் நிபுணத்துவம் ;

மற்றும்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில/ சிங்கள மொழிபெயர்ப்பாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) ***இணைத்துக்கொள்ளும் முறை.***- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படுகின்ற நேர்காணல் குழுவின் மூலம் நேர்காணல் நடாத்தப்படும். உயர் புள்ளிகளைப் பெற்றவர்களுள் திறமையின் ஒழுங்கின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

(iv) ***நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை :***

| | |
|---|---|
| பதவியுடன் தொடர்பான விடய அனுபவம் | 30 புள்ளிகள் |
| பதவியுடன் தொடர்பான மேலதிக தகுதி | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்களும் ஆற்றலும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) ***சம்பள அளவுத்திட்டம்.***- MA-4-2016 - ரூபா 37,970 - 10 x 755 - 15 x 930 - 5 x 1,135 - ரூபா 65,145 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

MA - 4-2006A - ரூபா 18,230 - 10 x 365 - 15 x 450 - 5 x 550 - 31,380 ரூபா (மாதாந்தம்)

அடிப்படைச் சம்பளம் - 2017 - 26,126 ரூபா.

6. பதவி.- **கட்புல செவிப்புல நுட்ப உதவியாளர் III *(1 பதவி)* :**

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை :***

(அ) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிங்களம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களுக்கு விசேட சித்தியுடன் ஒரே தரத்தில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அனைத்துப் பாடங்களிலும் (பொது உளச்சார்பு தவிர்ந்த) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடரத் தேவையான அடிப்படைத் தகைமை பெற்றவராக இருத்தல்.

(இ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- ஒவ்வொரு பதவிக்குரிய தொழில்நுட்ப பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) ஐந்தாம் (5) தரத்திற்கு குறையாத தொழில்நுட்ப பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) ***சம்பள அளவுத்திட்டம்.***- MA-*2-2-2016 - ரூபா 30,310 - 10* x *300 - 7* x *350 - 4* x *600 - 20* x *710 - ரூபா 52,360 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016* I *ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை* II *இன்படி சம்பளம் வழங்கப்படும்.*

MA - *2-2-2006*A - *ரூபா 14,610 - 10* x *145 - 7* x *170 - 4* x *290 - 20* x *345 - ரூபா 25,310 (மாதாந்தம்).*

*அடிப்படைச் சம்பளம் - 2017 - ரூபா 20,890.*

7. **பதவி.- விடுதி பராமரிப்பாளர்** III - **(பதவி 1)** :

(i) ***வயதெல்லை.***- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) ***கல்வித் தகைமை.***-

(அ) சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் மற்றும் சமூகப்பணி, உளவளத்துணை அல்லது சமூக அபிவிருத்தி துறையுடன் தொடர்பான 1 வருடத்துக்குக் குறையாத டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு.-

(iii) ***கல்வித் தகைமை :***

(அ) ஆரம்ப தர - திறன் சாராத, பகுதிவாரி திறன் மற்றும் அரை திறன் சேவை தரத்தின்கீழ் (அ), (ஆ), (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ள பணியாட்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சா. தரத்தில்) ஒரே அமர்வில் முதல் மொழி மற்றும் கணிதம் உட்பட மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியுடன் சமூகப்பணி, உளவளத்துணை அல்லது சமூக அபிவிருத்தியுடன் தொடர்பான பாடங்களில் 1 வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல்.

(கணினி தட்டச்சு, தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியொன்றினைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான தரத்தில் திறமைகள் உரிய சந்தர்ப்பத்தில் தகைமையாக உள்ளடக்கப்படலாம்.)

(இ) பதவி நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதுடன் அப்பதவியில் நிரந்தரமாக்கப் பட்டிருக்க வேண்டும்.

(ஈ) குறித்த திகதிக்கு முன்னர் நிலையான பதவியின்கீழ் 5 வருட தொடர்ச்சியான திருப்தியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(iv) ***சம்பள அளவுத்திட்டம்.***- MA-*1-2-2016 - ரூபா 27,910 - 10* x *300 - 7* x *350 - 12* x *600 - 12* x *710 - ரூபா 49,080 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016* I *ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றறிக்கையின் அட்டவணை* II *இன்படி சம்பளம் வழங்கப்படும்.*

MA-*1-2-2006*A - *ரூபா 13,450 - 10* x *145 - 7* x *170 - 12* x *290 - 12* x *345 - ரூபா 23,710 (மாதாந்தம்).*

*அடிப்படைச் சம்பளம் - 2017 - 19,234 ரூபா.*

மேற்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-

(i) பதவி நிரந்தரமானது ;
(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iii) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு.**- இப்பதவி வெற்றிடங்கள் பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் அந்நிலையங்களில் கடமையாற்ற வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்.**- *1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.*

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2017.03.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(கலாநிதி) ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய.
2017, பெப்புருவரி 16.

3-183

---

## இலங்கை நிரந்தரக் கடற்படை (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தரக் கடற்படை (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் துறைகளுக்கு தகைமையுடைய ஆண்/ பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) துறை.- மருத்துவம்/ பல் மருத்துவம் (நிரந்தரக் கடற்படை)

1. *பதவி.-* பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* MBBS மூன்றாம் பரீட்சையில் பகுதி I மற்றும் II ஐப் பூர்த்தி செய்திருத்தல் (இறுதி ஆண்டில் கல்வி கற்றல்)/ பல் மருத்துவ பட்டப் பாடநெறியில் BDS இறுதி ஆண்டு பகுதி I ஐப் பூர்த்தி செய்திருத்தல்

*வயது.-* 18 வருடங்களுக்கும் 26 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

2. *பதவி.-* துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* MBBS இறுதி ஆண்டைப் பூர்த்தி செய்திருத்தல்/ BDS இறுதி ஆண்டுபகுதி II ஐப் பூர்த்தி செய்திருத்தல்

வயது.- 30 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

3. *பதவி.-* வைத்திய லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* மருத்துவ/ பல் மருத்துவ பட்டத்தை (MBBS/BDS) பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையுடைய மற்றும் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல்

*வயது.-* ஆண் - 35 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
பெண் - 34 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *துறை.-* இசைக்குழு பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கை கட்புல மற்றும் அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகத்தில் நடனம் தொடர்பான அரங்கேற்ற கலைமானி விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நடனம் தொடர்பான நுண்கலைமானி பட்டமொன்றை பெற்றிருத்தல் (பாத்கண்ட பல்கலைக்கழகத்தில் நாட்டிய விசாரத டிப்ளோமா பெற்றிருப்பது விஷேட தகைமையாகக் கருதப்படும்)

*வயது.-* வயது 30 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(இ) *துறை.-* கப்பல் கட்டும் பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இயந்திர/ உற்பத்தி/ பொருள் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமானி பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் IESL தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

*வயது.-* வயது 32 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

3. ***ஏனைய தகைமைகள்.-*** விண்ணப்பதாரர்கள் இலங்கை நிரந்தர/தொண்டர் கடற்படையில் இணைந்து கொள்வதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) *குடியுரிமை.-* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.-* 2017, மாச்சு மாதம் 31ஆந் திகதியன்று வயது அந்தந்த துறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்.-* ஆண் - 168 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பெண் - 160 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

(ஈ) *உடல் எடை.-* ஆண் - 52 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பெண் - 41 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

(உ) *மார்பு.-* ஆண் - 81 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

(ஊ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.-* எஸ்ரீடீ II (சரியான பார்வை)

(எ) *தொலைப்பார்வை.-* இரண்டு கண்களிலும் 6/ 6

* மருத்துவ/பல் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொலைப்பார்வை மூக்குக் கண்ணாடி இல்லாமல் 6/ 6 முதல் 6/ 12 வரை (மூக்குக் கண்ணாடி மூலம் சரியாக 6/ 6 ஆக இருத்தல்)

(ஏ) *குடியியல் நிலை.-* ஆண் நிரந்தர - திருமணமாகாத

பெண் - திருமணமாகாத

* மருத்துவ/ பல் வைத்திய பிரிவில் லெப்டினன்ட் (ஆண்/ பெண்) - திருமணமான/ திருமணமாகாத

4. விளையாட்டுத் துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் முறையாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. மேற்குறித்த இரண்டாம் மூன்றாம் பந்திகளிலுள்ள தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், உடல் எடை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், உடல் எடை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது உரிய அளவில் இல்லாதிருப்பினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட தொழிற்திறனை அவர் பெற்றிருப்பின் சேவைத் தேவைப்பாட்டிற்கமைய கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் குறித்து கவனம் செலுத்தப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(அ) விண்ணப்பதாரர்கள் நிரந்தரக் கடற்படையின் உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படுவதோடு அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளுக்கும் உட்படுத்தப்படுவர். பாடநெறியின் கால எல்லை ஆட்சேர்க்கப்படும் அவ்வந்த துறைக்கமைய மாறுபடும்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் படி கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுவதற்கமைய இலங்கையில் எந்வொரு பிரதேசத்திலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிபெறுவதற்கு நிரந்தரக் கடற்படையின் உத்தியோகத்தர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(இ) அனைத்து உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகில் எந்தவொரு பிரதேசத்திற்கும் இணைப்புச் செய்யப்படுவர்.

(ஈ) பயிற்சி பெறும் காலப்பகுதியில் அல்லது அதன் பின்னர் நிரந்தர உத்தியோகத்தர்கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(உ) ஆணையினைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் ஏதேனுமொரு நிரந்தர உத்தியோகத்தர் தமது சுய விருப்பத்திற்கமைய பயிற்சியிலிருந்து விலகிக்கொள்ளுமிடத்து குறித்த நிரந்தர உத்தியோகத்தருக்காக அது வரையிலும் இலங்கை குடியரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தையும் குறித்த நிரந்தர உத்தியோகத்தர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.

(ஊ) பயிற்சிக் காலத்தின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு நிரந்தர உத்தியோகத்தரின் துர்நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக் கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்திற்காக அவர் ஆணையினை வழங்குவதற்கு பொருத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானிக்கப்பட்டால் அச் சந்தர்ப்பத்திலேயே குறித்த நிரந்தர உத்தியோகத்தர் அதுவரையிலும் அவருக்காக செய்த செலவுகள் அனைத்தையும் இலங்கை கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவரான கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) பயிற்சிக் காலத்தின் போது நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர் இல்லங்களில் தங்குமிட வசதிகளும் உணவுகளும் வழங்கப்படும்.

(ஏ) திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்கு குடிமனை (வெற்றிடங்கள் இருப்பின்) வழங்கப்படும். இதன் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு வாடகை அறவிடப்படும்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக்கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற மற்றும் இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்.**- 2016.01.01 ஆந் திகதி முதல் இல. 03/ 2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்.

| விபரம் | பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் | துணை லெப்டினன்ட் | லெப்டினன்ட் |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 28897.00 | 32807.00 | 38333.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 7800.00 | 7800.00 | 7800.00 |
| சீருடை பேணுதல் கொடுப்பனவு | 255.00 | 255.00 | 255.00 |
| கடின தங்குமிட கொடுப்பனவு | 600.00 | 600.00 | 600.00 |
| கடினப்படி (யுத்தமற்ற பிரதேசங்களில்) | 1000.00 | 1000.00 | 1000.00 |
| விசேட மேலதிக கொடுப்பனவு | 3000.00 | 3000.00 | 3000.00 |
| சரிசெய்தல் கொடுப்பனவு | 5373.00 | 4715.00 | 3833.00 |
| உணவுக் கொடுப்பனவு | 16138.00 | 16138.00 | 16138.00 |
| மொத்தம் | 63063.00 | 66315.00 | 70959.00 |

(அ) சரிசெய்தல் கொடுப்பனவு இல. 03/2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.01.01 ஆந் திகதிக்கு முழுமையாக அடிப்படைச் சம்பளத்திற்கு சேர்க்கப்படும்.

(ஆ) உணவு எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே உணவுக் கொடுப்பனவு கிடைக்கப்பெறும்.

(இ) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 செலுத்தப்படும்.

(ஈ) ஆண்டொன்றுக்கு மூன்று சோடிவிடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் உரித்தாகும். (உத்தியோகத்தருக்கு, துணைவிக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு)

(உ) முகாமில் வசிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதமொரு தடவை உத்தியோகத்தர் இல்லத்திலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் உரித்தாகும்.

(ஊ) சீருடையும் அதற்கான ஏனைய பொருட்களும் இலவசமாக வழங்கப்படும்.

(எ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (உத்தியோகத்தருக்கு, துணைவிக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு)

(ஏ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 1600.00 முதல் ரூபா 4250.00 வரை வாடகைக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

(ஐ) மருத்துவ/பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் படி உள்ளகப் பயிற்சி காலப்பகுதியின்பின்னர் மேலதிகக் கடமைக் கொடுப்பனவு மற்றும் 1/120 கொடுப்பனவு உரித்தாகும்.

(ஒ) பொறியியலாளர் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற விசேட கொடுப்பனவுகள் உரித்தாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தில் அனைத்து பந்திகளும் கூடியவரை விரிவாக விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் 2017, மாச்சு மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேஷ்ட பதவிநிலை அதிகாரி (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த.பெ.இ 593, கொழும்பு 01" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "கட்டாய ஆட்சேர்ப்பு செய்தல் - நிரந்தர உத்தியோகத்தர்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்கள் www.navy.lk என்னும் இணையத்தளத்தில் அல்லது தொலைபேசி இலக்கம் 011- 2215154/ 011- 2215512/ 011-2215513 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/கூட்டுத்தாபனத்தின்/சபையின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும் போது பின்வருவனவற்றின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை அனுப்பும்போது இவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் கல்வி/ உயர் கல்வி/ தொழில்சார் கல்வி/ பட்டம் சான்றிதழ் ;

(3) பாடசாலை விலகல் சான்றிதழ்/ நற்சான்றிதழ் ;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்பப்பயிற்சி அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.) ;

(7) விளையாட்டுத் துறைகள் மற்றும் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறெந்த ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு கடற்படை பொறுப்பல்ல.

10. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை குறித்து தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

11. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன :**

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்காக கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச் சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் கடற்படை தளபதியினால் விதித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும். இதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுச் சபையின் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் இறுதித் தேர்வு செய்யப்படும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| வயது எல்லை | 800 மீற்றர் ஓட்டம் | CURL UP (2MN) | PUSH UP (2MN) |
|---|---|---|---|
| 18 -24 ஆண் | 3.30 – 5.30 நிமிடத்திற்கிடையில் | 19 அல்லது அதை விடக் கூடுதலாக | 21 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 18 -24 பெண் | 4 – 6 நிமிடத்திற்கிடையில் | 13 அல்லது அதை விடக் கூடுதலாக | 05 அல்லது அதைவிடக் கூடுதலாக |
| 25 - 29 ஆண் | 4– 5.30 நிமிடத்திற்கிடையில் | 19 அல்லது அதை விடக் கூடுதலாக | 20 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 25 - 29 பெண் | 4.30 –6.30 நிமிடத்திற்கிடையில் | 12 அல்லது அதை விடக் கூடுதலாக | 03 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 30 - 34 ஆண் | 4.30 – 6.30 நிமிடத்திற்கிடையில் | 15 அல்லது அதை விடக் கூடுதலாக | 14 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 30 - 34 பெண் | 5 –7 நிமிடத்திற்கிடையில் | 09 அல்லது அதை விடக் கூடுதலாக | 02 அல்லது அதை விடக் கூடுதலாக |
| 35 - 39 ஆண் | 5 – 7 நிமிடத்திற்கிடையில் | 13 அல்லது அதை விடக் கூடுதலாக | 12 அல்லது அதை விடக் கூடுதலாக |

(இ) உடல் உறுதித் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களை மாத்திரமே அன்றைய தினமே நேர்முகத் தேர்விற்கு உட்படுத்துவதோடு, அதில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இரண்டாம் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இரண்டாம் நேர்முகத் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதோடு அத் தேர்வில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களின் படி அவ்வந்த துறையில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமே அழைக்கப்படுவர்.

(ஈ) நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(உ) இப்பதவி தொடர்பாக விண்ணப்பதாரர் அழைக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இறுதி நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடன் கூடியவரான விண்ணப்பதாரர்கள் கடற்படை மருத்துவச்சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். விண்ணப்பதாரர் ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஏ) ஆட்சேர்ப்பிற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

(ஐ) மருத்துவ/ பல் மருத்துவப் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருப்பின் அவரை தெரிவின் பின்னர் மீண்டும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக முழுச் சம்பளத்துடன் விடுவிப்பதோடு அதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவரான கடற் படைத் தளபதியுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் பிரசுரிக்கப்படுவதோடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில சொற்பிரயோகம் தொடர்பாக ஒவ்வாமை ஏற்பட்டால், அப்போது சிங்கள சொற்பிரயோகம் மேலோங்கி நிற்கும்.

ஆர்சி விஜேகுணரத்ன, டபிளியூவீ, ஆர்டபிளியூபி*,
ஆர்எஸ்பி, விஎஸ்வி, யூஎஸ்பி, என்டீசி, பிஎஸ்என்,
துணை அட்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தரக் கடற்படை அலுவலர்களுக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. விண்ணப்பிக்கும் துறை மற்றும் பதவி :----.

3. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளபடி) :----.

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

7. மின்னஞ்சல் முகவரி :----.

8. பிறந்த திகதி :----.

9. வயது (2017, மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று) வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. உயரம் :----. (செ.மீ) மார்பு :----. (செ.மீ) எடை :----. (கி.கி)

11. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தல் தொகுதி :----.

14. கிராம அலுவலர் பிரிவு :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பால் :----.

18. கல்வி கற்ற பாடசாலை :----.

19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர்கள் | பரீட்சையின் தன்மை | பரீட்சையின் ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த.(சா.த.)<br>க.பொ.த.(உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| தந்தை | | | | |
| தாய் | | | | |

22. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

23. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

24. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்றசாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

25. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

26. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது இடைநிறுத்தப்பட்ட சிறைத் தண்டனை பெற்றுள்ளீரா? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

28. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்தியவங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

29. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

30. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :**
மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் அமைய சரியானவை என உண்மையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கடற்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து புரிந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.
3-276

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை பரிபாலன பாடசாலைகளுக்கு நுழைவிற்கான போட்டிப் பரீட்சை - 2017

**2017/ 2019 ஆம் கல்வி ஆண்டிற்கான கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பரீட்சை**

2017.02.03 ஆந் திகதிய 2005 ஆம் இலக்கத்தினைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின், இலங்கைக் கால்நடை பரிபாலன பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சைக்கான (2017 ஆம் ஆண்டிற்கான) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவ்விண்ணப்பம் கோரலின் இறுதித் திகதியானது 2017.03.10 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

(டாக்டர்) ஆர். பீ. எம். பதிரத்ன,
கால்நடை உற்பத்தி சுகாதாரப்
பணிப்பாளர் நாயகம் (க/ பா).

3-72

**உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

கிராம அலுவலர் நிர்வாகப் பிரிவு

**கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2017**

1.0 கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான, ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடுகளுக்கமைய, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையொன்று, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது நடைபெறும் நகரங்களும் நகர இலக்கங்களும் கீழ்வரும் கூட்டில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தில் இதற்கான தலைப்பில் கூண்டிலுள்ள நகரங்கள் நகர இலக்கங்களுக்கமைய நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரமும்/ நகரங்களும் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நிலையத்திற்கு போதியளவு விண்ணப்பதாரிகள் தொகை இல்லாதுவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்கண்மைய நிலையமொன்றிற்கு உரிய விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்படுவர்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையினை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டதிட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு அவர்கள் உள்ளாகவேண்டி வரும்.

4. **தகைமைகள்**.- 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் அமுலில் உள்ள கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு விதிமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்புக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தகைமை பெறுவர்.

5. **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரர்கள் கீழே காட்டப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடக்கப்பட்ட எழுத்துப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| விடயம் | புள்ளிகள் | நேரம் | விடய இலக்கம் |
|---|---|---|---|
| 1. தாபன விதிக்கோவை மற்றும் நடை முறை விதிகள் | 100 | 1 1/2 மணி | 01 |
| 2. விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும் | 100 | 1 1/2 மணி | 02 |

5.1 ***அலுவலக முறைகள், அரச சேவையில் பொதுவான நடத்தையும் ஒழுக்கமும் :***

*அலுவலக முறைகள்.*- அரசாங்க அலுவலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் உபயோகிக்கப் படும் அலுவலக முறைகள் பற்றிய அறிவு மற்றும் அவ்வறிவை நடைமுறையில் பயன்படுத்தத்தக்க ஆற்றல் என்பன இதன்போது அளவிடப்பட எதிர் பார்க்கப்படுகின்றது.

*அரசாங்க சேவையில் பொதுவான நடத்தையும் ஒழுக்கமும்.*- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரகாரம், ஒழுக்காற்று அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ள முறைகள், சேவையினை முடிவுறுத்துதல், ஓய்வுபெறச் செய்தல் தொடர்பான விதிகள் மற்றும் தாபனக் கோவையின் II ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நடத்தை மற்றும் ஒழுக்கச் செயற்பாட்டுடன் தொடர்பான XIVII மற்றும் XIVIII அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் பற்றி விண்ணப்பதாரர்கள் கொண்டுள்ள அறிவும் விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

இவ்வினாப்பத்திரம் இரு பகுதிகளைக் கொண்டது :

*I ஆம் பகுதி.*- பல்தேர்வு வினாப்பத்திரம் - காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

*II ஆம் பகுதி.*- மூன்று வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

5.2 ***விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும்.***- கிராம அலுவலர்களுக்கு உரிய பல்வேறு சட்டதிட்டங்கள், அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள், வேறு நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுவதுடன், அவ்விடயத்துடன் தொடர்பான சம்பவங்கள் பற்றிய விடய ஆய்வும் உள்ளடக்கப்படும்.

*I ஆம் பகுதி.*- பல்தேர்வு வினாப்பத்திரம் - காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

*II ஆம் பகுதி.*- மூன்று வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

6. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறுவதுடன், இச்சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இன்றி சேவையில் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும், ஒன்றுக்கொன்று வித்தியாசமான அமர்வுகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது நாற்பது வீதம் (40%) என்றவகையில் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்திபெற்று, பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதி நாள், இவ்வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சித்தியடைந்த நாளாகக் கருதப்படும்.

8. பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு வழங்கப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. விண்ணப்பப்பத்திரமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்துகொள்ள வேண்டியதுடன், அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் ஊடாக 2017, மாச்சு 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், “பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, த. பெ. இல. 1503, கொழும்பு” எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10. ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.***- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் எல்லாப் பாடங்களின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளமானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி நிராகரிக்கப்படலாம்.

11. ***விண்ணப்பங்கள்.***- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 1.0 தொடக்கம் 6.0 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 7.0 தொடக்கம் ஏனையவை அனைத்தும் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் விதத்தில் A4 அளவிலான தாளொன்றில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் தட்டச்சு மூலம் தயாரிக்கப்பட முடியுமெனினும், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்து மூலமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இத்துடனுள்ள மாதிரியின்படியே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திணையாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரங்கள், அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திணைங்கியுள்ளதா என்பதனையிட்டு விண்ணப்பதாரர் நன்றாக விசாரித்தறிய வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும்.

12. முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், எவ்விதப் பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதன் பின்னரான பரீட்சைகளின்போது அலுவலர்களினால் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதெனின், பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவும், ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றுவதெனின் 250 ரூபாவும் ஆகும். இப்பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படக்கூடிய விதமாக, நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். மேலும் ஒரு நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியிருப்பின் உரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரம் இன்றிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதுடன், அது தொடர்பான

பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையெனின், அறிவித்தலில் கூறப்பட்ட விதத்தில் அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களால் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினதும் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினதும், பதிவு செய்யப்பட்ட சீட்டினதும் கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமொன்றெனின், அனுமதிப்பத்திரத்தை அனுப்பு வதற்காகத் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டுத் தங்களது கோரிக்கைக் கடிதத்தினை, அதன் பிரதியையும் தங்களிடம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவர்களினால் விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பயணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

15. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளி யிடுவது சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உள்ளாகவேண்டி ஏற்படுவதுடன், இப்பரீட்சை யின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் அல்லர் எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது அதற்குப் பின்னர் போன்ற எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இப்பரீட்சையுடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் பற்றியும் எனது தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

16. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள இவ்வறிவித்தலிலுள்ள வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடு அல்லது கருத்து மயக்கம் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

நீல் த அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, பெப்புருவரி 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2017**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS I OF GRAMA NILADHARI SERVICE - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]

| | | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| | முதலாம் தெரிவு | 1. | |
| | இரண்டாம் தெரிவு | 2. | |

தொடர்பான இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும். (இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

(வர்த்தமானி அறிவித்தலின் 2.0 பந்தியின்படி தாங்கள் பரீட்சைக் குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்புரிமை வரிசைப் படி குறிப்பிடுக.)
(இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1.01.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0

2.1 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 உரிய மாவட்டமும் மாவட்ட இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்- பந்தி 2 இல் தரப்பட்ட கூட்டின்படி குறிப்பிட்டபடி) :- [ | ]

2.3 உரிய பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச செயலாளர் இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்- அட்டவணை I இல் குறிப்பிட்டபடி) :- [ | | | ]

2.4 உரிய மாவட்டமும் பிரதேச செயலாளர் பிரிவும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3.0

3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2 பெண்/ ஆண் : ஆண் - 0
பெண் - 1 ☐
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.0 தாங்கள் இம்முறை பரீட்சையில் தோற்றும் விடயம்/ விடயங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியைப் பார்க்கவும்) :

| தொடர் இலக்கம் | விடயம் | பரீட்சை இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

5.0

5.1 உரிய தரம் :----.
5.2 பதவி :----.
5.3 தொடர்பான தரத்தில் நியமனம் பெற்ற திகதி :----.
5.4 தொலைபேசி இல. :----.

6.0 **கவனித்தல் வேண்டும்**.- வர்த்தமானி அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால்/ உப தபால் அலுவலகத்தினால் விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு அகன்று போகாத விதத்தில் ஒட்டப்படுதல் வேண்டும் :

☐

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால்/ உப தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பணம் ரூபா :----.

7.0 மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு என்றும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல்**

......................................... பிரதேச செயலாளர் பிரிவில் ......................................... கிராம அலுவலர் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர்,

(i) என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,

(iii) ஆண் அலுவலர்/ பெண் அலுவலர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியானவரென்றும்,

(iv) முதலாவது அமர்வு காரணமாக பரீட்சைக் கட்டணத்திலிருந்து அலுவலர் விலக்களிக்கப் படுகின்றார்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். (அவசியமற்றவற்றை வெட்டிவிடுக.).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
முகவரி :-----.
திகதி :-----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெலை | 1109 | |
| ஹோமகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்கை | 1118 | கொழும்பு |
| மகரகமை | 1121 | 0 1 |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| ரத்மலான | 1131 | |
| மொரட்டுவ | 1133 | |
| கெஸ்பேவ | 1136 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | |
| கந்தான | 1206 | |
| திவுலபிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | கம்பஹா |
| ஜாஎல | 1221 | 0 2 |
| கம்பஹா | 1224 | |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புளத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | களுத்துறை |
| மில்லனிய | 1318 | 0 3 |
| களுத்தறை | 1321 | |
| பேருவல | 1324 | |
| தொடங்கொட | 1327 | |
| மதுகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| தும்பனை | 2103 | |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாத்ததும்பர | 2112 | |
| பன்வில | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பே | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட்ட கோரளை | 2130 | கண்டி |
| ஹரிஸ்பத்துவ | 2133 | 0 4 |
| ஹதரலியத்த | 2134 | |
| யட்டிநுவர | 2136 | |
| உடுநுவர | 2139 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| தொலுவ | 2142 | |
| பாதஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட்ட | 2148 | கண்டி |
| உடபலாத்த | 2151 | 0 4 |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கலேவெல | 2203 | |
| தம்புள்ள | 2206 | |
| நாஉள | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யடவத்த | 2215 | மாத்தளை |
| மாத்தளை | 2218 | 0 5 |
| அம்பகஹ கோரளை | 2221 | |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கொத்மலை | 2303 | |
| ஹங்குரன்கெத | 2306 | |
| வலப்பனை | 2309 | நுவரெலியா |
| நுவரெலியா | 2312 | 0 6 |
| அம்கமுவ | 2315 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | |
| பலபிட்டிய | 3106 | |
| கரந்தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நாகொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | காலி |
| வெலிவிட்டிய-திவிதுர | 3130 | 0 7 |
| அம்பலாங்கொடை | 3133 | |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத் ஸதர | 3139 | |
| போபே போத்தல | 3142 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| அக்மீமன | 3145 | |
| யக்கலமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | காலி |
| கோனபீனுவல | 3154 | 0 7 |
| ஹபராதுவ | 3157 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பிடபத்தர | 3203 | |
| கொட்டபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலட்டியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ஸ | 3218 | |
| வெலிபிட்டிய | 3221 | மாத்தறை |
| மாலிம்பட | 3224 | 0 8 |
| கம்புறுபிட்டிய | 3227 | |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமஹாராம | 3309 | |
| அம்பாந்தோட்டை | 3312 | |
| அம்பலாந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபெலஸ்ஸ | 3318 | அம்பாந்தோட்டை |
| வீரகெட்டிய | 3321 | 0 9 |
| கட்டுவன | 3324 | |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்காலை | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| ஊர்காவத்துறை (தீவகம் வடக்கு) | 4103 | யாழ்ப்பாணம் |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | 1 0 |
| சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில் (வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய் (வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | யாழ்ப்பாணம் |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | 1 0 |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| மன்னார் | 4203 | |
| மாந்தை மேற்கு | 4206 | |
| மடு | 4209 | மன்னார் |
| நானாட்டான் | 4212 | 1 1 |
| முசலி | 4215 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | |
| வவுனியா தெற்கு | 4306 | வவுனியா |
| வவுனியா | 4309 | 1 2 |
| வென்கலச்செட்டிக்குளம் | 4312 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | முல்லைத்தீவு |
| ஒட்டுசுட்டான் | 4412 | 1 3 |
| கரைத்துறைப்பற்று | 4415 | |
| வெலிஓய | 4418 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | |
| கண்டாவளை | 4506 | கிளிநொச்சி |
| கரைச்சி | 4509 | 1 4 |
| பூநகரி | 4512 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர்பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | மட்டக்களப்பு |
| மண்முனை மேற்கு | 5121 | 1 5 |
| காத்தான்குடி | 5124 | |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தெஹியத்த கண்டிய | 5203 | |
| பதியத்தலாவ | 5206 | |
| மகாஓய | 5209 | |
| உஹன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை (தமிழ்) | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | அம்பாறை |
| நிந்தவூர் | 5230 | 1 6 |
| அட்டாளைச்சேனை | 5233 | |
| இறக்காமம் | 5234 | |
| அக்கரைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமண | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை (முஸ்லிம்) | 5254 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிசிறிபுற | 5303 | |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகம | 5318 | திருகோணமலை |
| கந்தளாய் | 5321 | 1 7 |
| கிண்ணியா | 5324 | |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருகல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | |
| கல்கமுவ | 6106 | |
| எஹெத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயகபுர | 6118 | |
| நிக்கவரெட்டிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாரியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | குருநாகல் |
| பமுணாகொடுவ | 6149 | 1 8 |
| மாஸ்பொத | 6151 | |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரிதீகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டிய கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டிய மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பன்னல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | |
| வனாதவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | புத்தளம் |
| ஆனமடுவ | 6224 | 1 9 |
| பள்ளம | 6227 | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மஹாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவ | 6245 | |
| தங்கொடுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பலாத்த | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொராவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பலாத | 7133 | அனுராதபுரம் |
| நாச்சியதீவு | 7136 | 2 0 |
| நொச்சியாகம | 7139 | |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| கலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெக்கிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இப்பாகமுவ | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஹிங்குராங்கொட | 7203 | பொலன்னறுவை |
| மெதிரிகிரிய | 7206 | 2 1 |
| லங்காபுர | 7209 | பொலன்னறுவை |
| வெலிகந்தை | 7210 | 2 1 |
| திம்பலாகம | 7212 | |
| தமந்கடுவை | 7215 | |
| எலஹர | 7218 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | |
| ரிதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெட்டிய | 8112 | |
| சொர்ணதொட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | பதுளை |
| பதுளை | 8121 | 2 2 |
| ஹாலி எல | 8124 | |
| ஊவாபரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | மொனராகல |
| படல்கும்புர | 8218 | 2 3 |
| புத்தல | 8221 | |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | |
| குருவிட்ட | 9106 | இரத்தினபுரி |
| கிரிஎல்ல | 9109 | 2 4 |
| இரத்தினபுரி | 9112 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓப்பநாயக்க | 9121 | |
| பெல்மதுளை | 9124 | இரத்தினபுரி |
| எலபாத்த | 9127 | 2 4 |
| அயகம | 9130 | |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிப்பிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | |
| மாவனல்ல | 9206 | |
| அரநாயக்க | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | கேகாலை |
| வரக்காபொல | 9218 | 2 5 |
| ருவன்வெல்ல | 9221 | |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தோட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

3-159

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்ரீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2017**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2017 |
| | | வெள்ளி | 10.03.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.02.2017 |
| | | வெள்ளி | 17.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2017 |
| | | வெள்ளி | 24.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2017 |
| | | வெள்ளி | 31.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2017 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 07.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2017 |
| | | புதன் | 12.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2017 |
| | | வெள்ளி | 21.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2017 |
| | | வெள்ளி | 28.04.2017 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2017 |
| **மே** | .. | வெள்ளி | 05.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2017 |
| | | வெள்ளி | 12.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2017 |
| | | வெள்ளி | 19.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2017 |
| | | வெள்ளி | 26.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2017 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*